THE HINDU 11 JAN 2025

# Erode (East) bypoll: 3 candidates file papers on day 1

**Candidates can file their nominations on January 13 and 17, while scrutiny of the papers will take place on January 18; the last date for withdrawing candidature is January 20 and counting of votes will take place on February 8, and the election process will conclude by February 10**

The Hindu Bureau
ERODE

Three candidates, including two independents, filed their nomination papers on Friday to contest the byelection for the Erode (East) Assembly constituency. Polling is scheduled on February 5.

Returning Officer and Corporation Commissioner N. Manish received the nominations from candidates between 11 a.m. and 3 p.m. at the Corporation office.

The nomination papers were verified by the officials

K. Padmarajan of Mettur in Salem district, nicknamed 'Election King' for having unsuccessfully contested a record number of elections, was the first candidate to file his papers with the Returning Officer. "I am contesting for the 247th time," he said.

Another candidate, A. Noor Muhamad of Sundarapuram, Coimbatore, said that despite efforts to promote 100% voter turnout, only 65% of the electors typically vote in elections, with many failing to exercise their democratic right. Contesting for the 46th time in elections, he urged voters to cast votes without succumbing to monetary inducements.


He walked with a gong and a fire pot to symbolise a funeral procession, but was stopped by police before crossing the 100 metre mark.

K. Madhuraivinayagam, an ex-army man of Viro Ke Vir Indian Party, also filed his nomination papers. He said he had served and protected the country for 20 years before retiring, and now wished to serve the people.

Elaborate security arrangements were in place at the Corporation office, with surveillance cameras installed to monitor the premises and the nomination process.

Candidates can file their nominations on January 13 and 17, while scrutiny of the papers will take place on January 18.

The last date for withdrawing candidature is January 20. Counting of votes will take place on February 8, and the election process will conclude by February 10.




Independent candidate K. Padmarajan submitting his nomination papers for the byelection to the Erode (East) Assembly constituency with the Returning Officer and Corporation Commissioner N. Manish in Erode on Friday. M. GOVARTHAN

Scanned with OKEN Scanner

DECCAN CHRONICLE

11 JAN 2025

3



K.Padmarajan, an independent, nicknamed 'Election King' for having contested in a record number of elections, submits his nomination papers for the bypoll to the Erode (East) Assembly constituency with Returning Officer and Corporation Commissioner N.. Manish on Friday. Three candidates, including two independents, filed their nomination papers on Friday to contest the byelection scheduled on February 5. Candidates can file their nominations on January 13 and 17, while scrutiny of the papers will take place on January 18. The last date for withdrawing candidature is January 20.

—*Zakeer Hussain*

Scanned with OKEN Scanner

THE TIMES OF INDIA FRI 1 JAN 2025

# Filing of nomination for Erode East bypoll begins

Times News Network

**Erode:** Election fever is slowly gripping Erode East assembly constituency, with filing of nominations commencing on Friday.

Though none of the major political parties have decided on their candidates, independents have begun filing nominations. The byelection was necessitated by the demise of Congress leader E V K S Elangovan, who was elected in the bypoll held in 2023 after the death of his son, Thirumagan Evera, the then MLA. The constituency is set to vote on February 5.

Serial election contester K Padmarajan was among the first lot to file the nomination papers. This is my 247th election, Padmarajan said. "I have contested 33 parliamentary elections, 76 assembly elections and several local body elections. I have also filed nominations in the polls for the President of India. My last election was the Vikravandi bypoll in which I got 16 votes," Padmarajan said.

S Parthiban



**ANOTHER ATTEMPT:** Serial election contester K Padmarajan files his nomination papers for the byelection

A Noor Mohamed, of Coimbatore, who has contested several elections, also filed nominations. He created a flutter as he visited the city corporation office with musical instrument and conch played during funeral processions.

An ex-serviceman from Karur, K Maduraivinayagam, also filed nomination. Vinayagam said he was contesting to draw attention of the govt towards the plight of farmers affected by river pollution in Karur.

Receiving the nominations from the candidates, returning officer and Erode corporation commissioner N Manish said the officials were taking all measures to ensure a free and fair election.

While the Congress is likely to contest as part of the DMK alliance again, the AIADMK is yet to decide whether it would contest or boycott the election the way it did in Vikravandi last year. The NTK and the BJP are also yet to make their stand clear on the bypoll.

Scanned with OKEN Scanner

THE NEW INDIAN EXPRESS 11 JAN 2025

# Filing of nomination for Erode East bypoll commences, three file papers

EXPRESS NEWS SERVICE @Erode

THREE independents submitted applications to contest in the bypoll for Erode East Assembly constituency as filing of nomination papers began on Friday.

K Padmarajan (64), from Mettur in Salem, known as the 'Election King', was the first to file nomination. He has so far contested in 246 elections, and lost in all of them. "My only intention is to contest in the elections for a record," said Padmarajan, who has been featured in Guinness Book of Records for most elections contested. He first contested in an election in 1988 from Mettur.

A Noor Mohammed, (67) of Sundarapuram in Coimbatore, who is contesting election for the 47th time and K Madurai Vinayagam, (51), a retired army ma of Uratchi Seiyur in Chengalpattu district, also filed nominations.



Filing of nominations for Erode East Assembly seat bypoll began on Friday. K Madurai Vinayagam was among the independents who filed papers | EXPRESS

Returning Officer and Corporation Commissioner Manish Narnaware received nomination papers. Speaking to reporters, he reminded contestants that nominations can be filed only on January 13 and 17.

So far, 42 election related complaints have been received and ₹2.8 lakh unaccounted cash has been seized from general public, he added.

Scanned with OKEN Scanner

6

இந்து தமிழ்

11 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# முதல் நாளில் பத்மராஜன் உள்பட 3 பேர் வேட்புமனு தாக்கல்

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி வேட்புமனுத் தாக்கல் நேற்று தொடங்கியது. பிரதான கட்சிகள் இதுவரை வேட்பாளர்களை அறிவிக்காத நிலையில், நேற்று சுயேச்சை வேட்பாளர்கள் 3 பேர் மனு தாக்கல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று தொடங்கி வரும் 17-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

வரும் 18-ம் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை, 20-ம் தேதி வேட்பு மனுக்கள் வாபஸ் பெற கடைசி நாளாகும்.

அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். தொடர்ந்து பிப்ரவரி 5-ம் தேதி வாக்குப்பதிவும், 8-ம் தேதி சித்தோட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கையும் நடைபெற உள்ளது.

**மனு தாக்கல் தொடங்கியது**

இந்நிலையில் நேற்று வேட்பு மனுத்தாக்கல் தொடங்கியது. திமுக உள்ளிட்ட பிரதான கட்சிகள் வேட்பாளரை அறிவிக்காத நிலையில், சுயேச்சை வேட்பாளர்கள் சிலர் மட்டும் நேற்று மனு தாக்கல் செய்ய வந்தனர்.

முதல் நபராக சேலம் மாவட்டம் மேட்டூரைச் சேர்ந்த தேர்தல் மன்னன் பத்மராஜன் (64) என்பவர் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்தார்.

இது குறித்து பத்மராஜன் கூறுகையில், நான் இதுவரை 246 தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். தற்போது ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடுவதற்காக மனு தாக்கல் செய்துள்ளேன்.

வாஜ்பாய், நரசிம்மராவ், கருணாநிதி, ஜெயலலிதா என பலரை எதிர்த்து போட்டியிட்டுள்ளேன். கடைசியாக கேரள மாநிலம் வயநாட்டில் நடந்த எம்பி தேர்தலில் பிரியங்கா காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டேன்.

தமிழகத்தில் கடைசியாக விக்கிரவாண்டியில் நடந்த இடைத் தேர்தலில் போட்டியிட்டேன். கடந்த முறை ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு 8 வாக்குகள் பெற்றேன்.

இன்னும் இந்தியாவில் எத்தனை தேர்தல் வந்தாலும் நான் உயிரோடு இருக்கும் வரை அனைத்து தேர்தலிலும் போட்டியிடுவேன். தேர்தல் பிரச்சாரம் செய்ய மாட்டேன். எனது நோக்கம் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பது மட்டும் தான், என்றார்.

**பலத்த போலீஸ் பாதுகாப்பு**

இதனிடையே வேட்புமனு தாக்கல் தொடங்கிய முதல் நாளில் சுயேச்சை வேட்பாளர்கள் 3 பேர் மட்டும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். இதன்படி பத்மராஜன், நூர் முஹம்மது, முன்னாள் ராணுவ வீரர் மதுர விநாயகம் ஆகியோர் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.

வேட்புமனுத்தாக்கலை முன்னிட்டு மாநகராட்சி அலுவலக நுழைவாயில் மற்றும் வளாகம் முழுவதும் ஈரோடு டவுன் போலீஸ் டிஎஸ்பி முத்துக்குமரன் தலைமையில் ஏராளமான போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

Erode East Assembly Constituency By-election
3 persons filed nomination on the first day including Padmarajan.


Scanned with OKEN Scanner

தினத்தந்தி 11 JAN 2025

தேர்தல் கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனை:

# லேத் பட்டறை உரிமையாளரிடம் ரூ.1¾ லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.11-
தேர்தல் கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையின்போது, உரிய ஆவணம் இல்லாததால் லேத் பட்டறை உரிமையாளரிடம் இருந்து ரூ.1¾ லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.



தேர்தல் பறக்கும் படையால் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைக்கப்பட்ட போது எடுத்த படம்.

## ரூ.1¾ லட்சம்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்க தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஈரோடு அரசு ஆஸ்பத்திரி ரவுண்டானா பகுதியில் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நேற்று வாகன சோதனை மேற்கொண்டனர். அப்போது, அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். காரில் ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

## பறிமுதல்

இதைத்தொடர்ந்து காரை ஓட்டி வந்தவரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு பகுதியை சேர்ந்த லேத் பட்டறை உரிமையாளர் மதன் (வயது 55) என்பதும், ஈரோட்டில் நிலம் வாங்குவது தொடர்பாக பணம் கொண்டு வந்ததும் தெரியவந்தது.

எனினும் அவர் கொண்டு வந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால், கண்காணிப்பு குழுவினர், மதனிடம் இருந்த ரூ.1 லட்சத்து 80 ஆயிரத்தை பறிமுதல் செய்து, தேர்தல் கட்டுப்பாட்டு அறை அலுவலர்களிடம் ஒப்படைத்தனர். பின்னர் தேர்தல் நடத்தும் அதிகாரியும், மாநகராட்சி ஆணையாளருமான மனிஷ் உத்தரவின் பேரில், அந்த பணம் அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது. உரிய ஆவணங்கள் இல்லாமல் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட ரூ.1 லட்சம், நேற்று ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் என மொத்தம் இதுவரை மொத்தம் ரூ.2 லட்சத்து 80 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

Election Monitoring Team vehicle checking : Rs.1.75Lakhs seized from a lathe owner.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 11 JAN 2025

கிராமப்பகுதிகள் இல்லை

# மாநகராட்சியின் 33 வார்டுகளில் அடங்கிய ஈரோடு கிழக்கு தொகுதி

ஈரோடு, ஜன.11-

ஈரோடு கிழக்கு தொகுதியில் கிராமப்பகுதிகளே இல்லாமல் முழுவதும் ஈரோடு மாநகராட்சியின் 33 வார்டுகளுக்குட்பட்டதாக உள்ளது.

## கிராமப்பகுதிகள் இல்லை

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, பவானி, அந்தியூர், கோபி, பவானிசாகர் என 8 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. ஈரோடு மாவட்டம் பெரும்பாலும் கிராமங்களை கொண்ட மாவட்டம். இதனால் சட்டமன்ற தொகுதிகளில் கிராமப்பகுதிகளே அதிகமாக இருக்கும்.

ஆனால், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி மட்டும் கிராமப்பகுதிகள் இல்லாமல் முழுமையாக ஈரோடு மாநகராட்சிக்குள் அடங்கி உள்ளது. ஈரோடு, பி.பி.அக்ரகாரம், வீரப்பன்சத்திரம் ஆகிய பகுதிகள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்டவையாகும்.

## 33 வார்டுகள்

ஈரோடு ஏற்கனவே நகராட்சி பகுதியாக இருந்தது. பி.பி. அக்ரகாரம் பழமையான பேரூராட்சியாக இருந்தது. வீரப்பன்சத்திரம் 3-ம் நிலை நகராட்சியாக இருந்தது. ஈரோடு மாநகராட்சி உருவாக்கப்பட்டபோது பி.பி.அக்ரகாரம், வீரப்பன்சத்திரம் பகுதிகள் இணைக்கப்பட்டன.

அதன்படி தற்போதைய ஈரோடு கிழக்கு தொகுதி முழுமையும் ஈரோடு மாநகராட்சிக்கு உள்பட்டதாகவே உள்ளன. ஈரோடு மாநகராட்சியில் மொத்தம் 60 வார்டுகள் உள்ளன. இதில், 6, 7, 14, 15, 16, 17, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 51, 52, 53 ஆகிய 33 வார்டுகள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்டவையாகும். இந்த வார்டு பகுதிகளில் மட்டுமே தேர்தல் விதிமுறைகள் அமலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

No Rural areas.

Erode East Assembly Constituency consists of 33 wards of the corporation.

Scanned with OKEN Scanner

51

தினத்தந்தி

11 JAN 2025

வேட்புமனு தாக்கல் தொடக்கம்

# மாநகராட்சி அலுவலகத்தில் பலத்த பாதுகாப்பு

ஈரோடு, ஜன.11-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் நேற்று வேட்புமனு தாக்கல் தொடங்கியது. இதையொட்டி நேற்று மாநகராட்சி அலுவலகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜவகர் உத்தரவின் பேரில், கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ராஜாரணவீரன், டவுன் போலீஸ் துணை சூப்பிரண்டு முத்துக்குமரன் ஆகியோர் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் சரவணன், செந்தில்பிரபு, கோமதி மற்றும் போலீசார் பாதுகாப்பு பணியில் இருந்தனர். ஊர்க்காவல் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மாநகராட்சி அலுவலகத்துக்கு நேற்று வந்த அனைவரும் போலீசாரின் சோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.



Nomination started

Tight security at the Corporation Office.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 11 JAN 2025

# வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5–ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு 18 வயது பூர்த்தியான அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாநகராட்சி சார்பில் கருங்கல்பாளையத்தில் கோலம் வரைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்த போது எடுத்த படம்.

SVEEP Activity - To emphasis the people who completed 18 years of age to cast their votes.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 11 JAN 2025


வேட்புமனு தாக்கல் செய்ய

# இறுதிச்சடங்கு செய்வதுபோல வந்த வேட்பாளரால் பரபரப்பு

ஈரோடு, ஜன.11-

ஈரோடு கிழக்கு தொகுதியில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. நேற்று முதல் வேட்புமனு தாக்கல் தொடங்கியது. முதல் நாளில் 3 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

கோவை சுந்தராபுரம் பகுதியை சேர்ந்த நூர்முகமது வேட்புமனு தாக்கல் செய்தார். அவர் வேட்புமனு தாக்கல் செய்ய மஞ்சள் நிறதுண்டை தலையில் சுற்றிக்கொண்டும், இன்னொரு துண்டை தோளில் போட்டுக்கொண்டு வேட்டி-பனியனுடன் இறுதிச்சடங்கு செய்வதற்கு செல்வதுபோல் தீச்சட்டி, சங்கு, சேவண்டி இசைத்துக்கொண்டும் வந்தார். அப்போது அவர் கையில் வைத்திருந்த பால் பாக்கெட்டை உடைத்து பாலை தரையில் கொட்டினார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து போலீசார் அந்த வேடத்தில் அவரை வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதிக்கவில்லை.



இறுதிச்சடங்கு செய்ய செல்வது போல் நூர்அகமது வேட்புமனு தாக்கல் செய்ய வந்த காட்சி.

பின்னர் வேட்டி-சட்டை அணிந்து வேட்புமனு அளித்தார். அவர் கூறும்போது, 100 சதவீத ஓட்டுப்பதிவை வலியுறுத்தியும், ஜனநாயக தேர்தலில் பணம் பெற்றுக்கொண்டு ஓட்டுப்போடும் கலாசாரத்துக்கு இறுதிச்சடங்கு நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தீச்சட்டி, சங்கு, சேவண்டியுடன் வந்ததாக தெரிவித்தார். இதுவரை நடந்த தேர்தல்களில் 16 முறை நூர்முகமது வேட்புமனு தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

To file nomination a candidate came as if doing a funeral

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 11 JAN 2025

# முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்களிக்க ஏற்பாடு

ஈரோடு, ஜன.11-

முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல் நடத்தும் அதிகாரி மனிஷ் தெரிவித்துள்ளார்.

## தபால் வாக்கு

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியும், மாநகராட்சி ஆணையாளருமான மனிஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்க முடியாத 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களது வாக்குகளை தபால் வாக்குப்பதிவு மூலம் செலுத்தலாம். இதற்காக தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், சம்பந்தப்பட்ட வாக்காளர்களுக்கு வருகிற 15-ந்தேதிக்கு முன்பு அதற்கான படிவம் - 12டி வழங்கி ஒப்புதல் பெற உள்ளனர்.

வாக்காளர்கள் வீட்டில் இல்லையெனில், 2-வது முறை நேரில் சென்று ஒப்புதல் பெறுவார்கள். இதன் பின்னர், வாக்காளர்கள் வீட்டிலிருந்தவாறே வாக்களிக்க ஏதுவாக வாக்காளரின் குடியிருப்பு பகுதிக்கு வாக்குப்பதிவு அலுவலர்கள் வருகை தருவார்கள். அதற்கான நாள், நேரம் குறித்து முன்னதாகவே வாக்காளர் தெரிவித்த செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். செல்போன் எண் குறிப்பிடாதவர்களுக்கு தபால் மூலமாக அல்லது சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலமாக தகவல் தெரிவிக்கப்படும்.

## ரகசியம் காப்பு உறுதிமொழி

அதன் பின்னர் வாக்குச்சாவடி அலுவலர் குழு வாக்காளர் வீட்டுக்கு சென்று வாக்காளர் அடையாளத்தை சரிபார்த்து, அந்த விவரத்தை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து, வாக்காளரின் கையொப்பம் அல்லது கைரேகை பெற்றுக்கொண்டு தபால் வாக்குச்சீட்டை வழங்குவார்கள். வாக்காளர் கண் பார்வையற்று அல்லது உடல் நலிவு காரணமாக வாக்களிக்க இயலாத நிலையிலிருப்பின் அவரது சார்பில் கட்சி சார்பற்ற வயது வந்த ஒருவரை, வாக்களிப்பு குறித்து ரகசியம் காப்பு உறுதிமொழி பெற்றுக்கொண்டு வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

மாற்றுத்திறனாளிகளை பொறுத்தவரை, தாங்கள் மாற்றுத்திறனாளிகள் தான் என்பதற்கு தகுந்த அரசு சான்றிதழ் நகலை அளிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Arrangements are made for aged / physically challenged people to cast their votes by post.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 11 JAN 2025

### ஒரே நேரத்தில் அதிகம் பேர் வந்தால்

# உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்யலாம்

## மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் மனிஷ் பேட்டி

ஈரோடு, ஜன.11-
வேட்புமனு தாக்கல் செய்ய ஒரே நேரத்தில் அதிகம்பேர் வந்தால் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்பு மனுக்கள் வழங்கலாம் என்று மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் மனிஷ் கூறினார்.

### வேட்புமனு தாக்கல்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது. வருகிற 17-ந் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்ய கால அவகாசம் உள்ளது. ஆனால் இன்று (சனிக்கிழமை), நாளை (ஞாயிற்றுக்கிழமை) விடுமுறை. அடுத்து நாளை மறுநாள் (திங்கட்கிழமை) வேட்புமனு தாக்கல் செய்ய வேலை நாளாகும். அடுத்து 14-ந் தேதி முதல் 16-ந் தேதி வரை 3 நாட்கள் பொங்கல் விடுமுறை. 17-ந் தேதி வேட்புமனு தாக்கல் செய்யலாம். எனவே இடைத்தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய 2 நாட்களே உள்ளது.

நேற்று வேட்புமனு தாக்கல் நிறைவுபெற்றதும் ஈரோடு மாநகராட்சி ஆணையாளரும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான டாக்டர் மனிஷ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

### உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் வேட்புமனு தாக்கல் தொடங்கி உள்ளது. 3 சுயேச்சை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். அடுத்து, 13, 17 ஆகிய தேதிகளில் காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

வேட்புமனு தாக்கலுக்கு இன்னும் 2 நாட்கள் மட்டுமே உள்ளது. எனவே வேட்பாளர்கள் வேட்புமனுவை முறையாக சமர்ப்பிக்கும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மனுக்கள் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா? என பரிசீலனை செய்த பிறகே தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுகிறது. வரும் நாட்களில் வேட்புமனு தாக்கல் செய்ய ஒரே நேரத்தில் அதிகம்பேர் வந்தால் தேர்தல் நடத்தும் அதிகாரி மட்டுமின்றி, உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியிடமும் தாக்கல் செய்யலாம். அதனால் எந்த பிரச்சினையும் இல்லை.

### 42 புகார்கள்

ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட அரசு கட்டிடங்கள், பொது இடங்கள், தனியார் இடங்களில் உள்ள அரசியல் சார்ந்த விளம்பரங்கள் அகற்றப்பட்டுள்ளன. தேர்தல் கட்டுப்பாட்டு அறை எண்ணுக்கு இதுவரை 42 புகார்கள் வந்துள்ளன. புகார்கள் தொடர்பாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பறக்கும் படையினர் தொகுதி முழுவதும் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் ரூ.1 லட்சம், நேற்று ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் என இதுவரை ரூ.2 லட்சத்து 80 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. பணம் மாவட்ட கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

Mr.Manish, The Returning Officer / The Corporation Commissioner informs - if more people arrive for filing nomination at the same time nomination can be filed with the Assistant Returning Officer.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 11 JAN 2025

**ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்:**

# தேர்தல் மன்னன் பத்மராஜன் உள்பட 3 பேர் வேட்புமனு தாக்கல்

ஈரோடு, ஜன.11-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட தேர்தல் மன்னன் பத்மராஜன் உள்பட 3 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.



தேர்தல் மன்னன் பத்மராஜன், தேர்தல் நடத்தும் அதிகாரி மனிஷிடம் வேட்புமனு தாக்கல் செய்த போது எடுத்த படம்.

### வேட்புமனு தாக்கல்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியின் இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு நேற்று வேட்புமனு தாக்கல் தொடங்கியது. ஈரோடு மாநகராட்சி அலுவலகம் கிழக்கு தொகுதி தேர்தல் அலுவலகமாக உள்ளதால் இங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. மாநகராட்சி அலுவலகத்துக்கு வந்த அனைவரும் பலத்த சோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்பட்டனர்.

காலை 11 மணிக்கு வேட்பு மனுக்கள் பெற தேர்தல் நடத்தும் அதிகாரி டாக்டர் மனிஷ் அலுவலகத்தில் தயாராக இருந்தார். அவருடன் உதவி கலெக்டர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, துணை கலெக்டர் (பயிற்சி) சிவபிரகாசம், தாசில்தார் வீரலட்சுமி, மாநகராட்சி மன்ற செயலாளர் அமல்ராஜ், கண்காணிப்பாளர் ரா்தாகிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் இருந்தனர்.

### தேர்தல் மன்னன்

முதல் வேட்பாளராக கின்னஸ் சாதனை படைத்த சேலம் மாவட்டம் மேட்டூரை சேர்ந்த தேர்தல் மன்னன் பத்மராஜன் தனது வேட்பு மனுவை கொண்டு வந்தார். அவரது மனுவை அதிகாரிகள் சரிபார்த்தனர். பின்னர் அவர் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் மனு கொடுத்தார்.

பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறும் போது, 'இதுவரை இந்திய அளவில் பல தேர்தல்களிலும் சேர்த்து 246 முறை வேட்பு மனு தாக்கல் செய்து உள்ளேன். கடைசியாக வயநாடு நாடாளுமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டேன். தற்போது 247-வது முறையாக ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலிலும் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளேன். இதுவரை தேர்தலுக்காக மட்டும் ரூ.1 கோடி வரை செலவிட்டுள்ளேன்' என்றார்.

### ராணுவ அதிகாரி

கரூர் ஆத்தூர் பிரிவு பகுதியை சேர்ந்த முன்னாள் ராணுவ அதிகாரி கே.மதுரை விநாயகம் என்பவர் ராணுவ சீருடையில் வந்து வேட்பு மனு தாக்கல் செய்தார். அவர் 22 ஆண்டுகள் ராணுவத்தில் சேவை செய்ததாகவும், ஓய்வுக்கு பின்னர் மக்கள் சேவைக்காக தேர்தலில் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார். இவர் நாடாளுமன்ற தேர்தலில் பொள்ளாச்சி தொகுதியிலும், விக்கிரவாண்டி இடைத்தேர்தலிலும் ஏற்கனவே வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாறு நேற்று முதல் நாளில் 3 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். வேட்பு மனு தாக்கல் பிற்பகல் 3 மணியுடன் நிறைவுபெற்றது. இதையொட்டி சரியாக 3 மணிக்கு மாநகராட்சி அலுவலக மெயின் கதவு மூடப்பட்டது. அடுத்து நாளை மறுநாள் (திங்கட்கிழமை) மனுக்கள் பெறப்படும். மேலும் 17-ந் தேதி அன்றும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யலாம்.

அரசியல் கட்சியினர் இன்னும் வேட்பாளர்களை அறிவிக்கவில்லை. அவர்கள் வேட்பாளர்களை அறிவிக்கப்பட்ட பின்னர் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் களம் சூடுபிடிக்க தொடங்கிவிடும்.

Erode East Assembly Constituency By-election
Three persons filed nomination including "Therthal Mannan Padmarajan"

Scanned with OKEN Scanner

தினமலர் 11 JAN 2025

## 247வது முறையாக போட்டியிட

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்த தேர்தல் மன்னன்

ஈரோடு, ஜன. 11-

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கி 17ம் தேதி வரை நடைபெறுகிறது. தொடர்ந்து, விடுமுறை நாட்கள் தவிர மீதமுள்ள 13, 17 -ம் தேதிகளில் என மொத்தம் 3 நாட்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் நடைபெறும்.

இதையடுத்து, 18ம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது. 20ம் தேதி வேட்பு மனுக்கள் வாபஸ் பெற கடைசி நாளாகும். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். தொடர்ந்து, பிப்ரவரி 5ம் தேதி வாக்குப் பதிவு நடைபெறுகிறது. 8ம் தேதி, சித்தோட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த நிலையில், தேர்தல் கமிஷன் அறிவிப்பின்படி, நேற்று வேட்புமனுத் தாக்கல் தொடங்கியது.தி.மு.க. உள்ளிட்ட பிரதான கட்சிகள் வேட்பாளரை அறிவிக்காத நிலையில், சுயேட்சை வேட்பாளர்கள் சிலர் மட்டும் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்ய வந்தனர்.

முதல் நபராக தேர்தல் மன்னன் சேலம் மாவட்டம் மேட்டூரை சேர்ந்த பத்மராஜன் (64) என்பவர் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்தார்.

இதுகுறித்து பத்மராஜன் கூறியதாவது:-

நான் இதுவரை 246 தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். தற்போது ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்துள்ளேன். இது 247வது தேர்தலாகும். நான் இதுவரை 6 ஜனாதிபதி தேர்தல், 6 துணை ஜனாதிபதி தேர்தல், 33 பாராளுமன்றத் தேர்தல், 76 எம்.எல்.ஏ.க்கள் தேர்தல், மாநகராட்சி மேயர் தேர்தல், கவுன்சிலர் தேர்தல் என போட்டியிட்டு உள்ளேன். வாஜ் பாய், நரசிம்மராவ், கருணாநிதி, ஜெய லலிதா, சினிமா நடிகர் சரத்குமார் என பலரை எதிர்த்து போட்டியிட்டு உள்ளேன். கடைசியாக கேரள மாநிலம் வயநாட்டில் நடந்த எம்.பி. தேர்தலில் பிரியங்கா காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டு 286 வாக்குகள் பெற்றேன்.

தமிழகத்தில் கடைசியாக விக்கிரவாண்டியில் நடந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டு 16 வாக்குகள் பெற்றேன். கடந்த முறை ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு 8 வாக்குகள் பெற்றேன். தேர்தலில் அதிக முறை போட்டியிட்டதற்காக கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளேன்.

இன்னும் இந்தியாவில் எத்தனை தேர்தல் வந்தாலும் நான் உயிரோடு இருக்கும் வரை அனைத்து தேர்தலிலும் போட் டியிடுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

"Therthal Mannan" filed his nomination for the 247th time in Erode East Assembly Constituency By-election

Scanned with OKEN Scanner

தினமலர்
11 JAN 2025

# ஈரோட்டில் தேர்தல் பறக்கும் படை சோதனையில் ரூ.1.80 லட்சம் சிக்கியது

ஈரோடு, ஜன.11-

ஈரோட்டில் நேற்று தேர்தல் பறக்கும் படை சோதனையில் ரூ.1.80 லட்சம் சிக்கியது.

உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட இரண்டு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் இருவரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது

ஈரோட்டில் இரண்டாவது முறையாக நடைபெறும் ஈரோடு கிழக்கு சட்ட மன்ற இடைத்தேர்தலில் முதல் நாள் வேட்பு மனு தாக்கல், 3 மணியுடன் நிறைவடைந்தது. வேட்பு மனு தாக்கல் தொடங்கிய முதல் நாளில் 3 சுயேட்சை வேட்பாளர் ஆர்வத்துடன் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இதில் பிரபல தேர்தல் மன்னன் பத்மராஜன், நூர் முஹம்மது, முன்னாள் ராணுவ வீரர் மதுர விநாயகம் உட்பட 3பேர் தேர்தல் நடத்தும் அலுவலர் மனீஸிடம் முதல் நாளில் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

இது குறித்து ஈரோடு மாநகராட்சி கமிஷனரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான மனிஷ் கூறும்போது, நேற்றுமுன்தினம் கருங்கல்பாளையம் சோதனை சாவடியில் ரூ.1 லட்சம், நேற்று ஜி.ஹெச் ரவுண்டானா பகுதியில் ரூ.1.80 லட்சம் என இது வரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.2லட்சத்து 80 ஆயிரம் இருவரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது பறிமுதல் செய்த பணம் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு வசதியாக மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகிய இருவரிடமும் வேட்பு மனு தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேர்தல் விதி மீறல்கள் குறித்து வரக்கூடிய புகார் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

Election Flying Squad seized Rs.1.80 Lakhs in Erode.

Scanned with OKEN Scanner

31

தினமலர் 11 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல்

# கையில் சாவு சட்டி, மணியுடன் வேட்புமனு தாக்கல் செய்ய வந்த சுயே. வேட்பாளர்

ஈரோடு: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று தொடங்கியது. இதற்காக ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. முதல் ஆளாக தேர்தல் மன்னன் பத்ம ராஜன் வேட்பு மனு தாக்கல் செய்தார். அதைத்தொடர்ந்து கோவை மாவட்டம் சுந்தரா புரத்தைச் சேர்ந்த நூர் முகமது என்பவர் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய வந்தார்.

அவர் கையில் சாவு சட்டி, சாவு மணியுடன் வந்தார். அவரை 100 மீட்டர் தொலைவு முன்பு பாது காப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் தடுத்து நிறுத்தி வேட்பு மனு தாக்கல் செய்ய சாவு சட்டியுடன் உள்ளே செல்ல அனுமதி இல்லை என்று கூறினர். இதனையடுத்து அவர் சாவு சட்டி, சாவு மணியை கழற்றி அருகே இருந்தவரிடம் கொடுத்து விட்டு, தான் கொண்டு வந்த பாக்கெட் பாலை ரோட்டில் கொட் டினார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அவர் வேட்பு மனு தாக்கல் செய்தார். இது குறித்து நூர் முகமது கூறும் போது, மக்கள் ஜனநாயக அடிப்படையில் ஓட்டு போட வேண்டும். காசு வாங்கி ஓட்டு போடும் நிலை மாற வேண்டும். தேர்தல் என்றாலே 100 சதவீதம் ஓட்டு போட வேண்டும். ஆனால் மக்கள் 60 சதவீதம் தான் ஓட்டு போடுகிறார்கள். அதுவும் காசு கொடுத்தால்தான் ஓட்டு போட நினைக்கிறார்கள். இன்னும் சிலர் விடுமுறைக்காக ஓட்டு போடாமல் ஊருக்கு செல்கிறார்கள். அவர்கள் ஓட்டு போட்டு தான் ஊருக்கு செல்ல வேண்டும். எனவே பொதுமக்கள் இனியும் காசு வாங்கி ஓட்டு போட கூடாது. ஜன நாயகத்தை மக்கள் பாதுகாக்க வேண்டும் என் பதை வலியுறுத்தி தற் போது 46வது முறையாக தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்யவந்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

Erode East Assembly Constituency By-election
The Independent Candidate came with funeral things to file his nomination.

Scanned with OKEN Scanner

தினகரன் 11 JAN 2025



ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை அருகே

# காரில் ஆவணமின்றி கொண்டு வந்த ரூ.1.80 லட்சம் பறிமுதல்




▶ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வேட்பு மனு தாக்கல் நேற்று துவங்கிய நிலையில் வீரப்பன் சத்திரம் பகுதியில் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

## நிலை கண்காணிப்பாளர் குழு நடவடிக்கை

**ஈரோடு, ஜன.11:** ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை ரவுண்டானாவில், நிலை கண்காணிப்பாளர் குழுவினர் நடத்திய வாகன சோதனையில் ரூ.1.80 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்க தேர்தல் பறக்கும் படை குழுகள், நிலை கண்காணிப்பாளர் குழுக்கள், தொகுதிக்கப்பட்ட இடங்களில் தீவிர வாகனச் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கிழக்கு தொகுதிக்குட்பட்ட அரசு தலைமை மருத்துவமனை ரவுண்டானாவில், நிலை கண்காணிப்பாளர் குழுவினர் நேற்று காலை வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி போலீசார் சோதனை மேற்கொண்டனர். காரில், ரூ.1.80 லட்சம் ரொக்கம் இருந்தது. காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தினர். அப்போது அவர் திருச்செங்கோட்டைச் சேர்ந்த லேத் பட்டறை உரிமையாளர் மதன் (55) என்பதும், ஈரோட்டில் நிலம் வாங்குவது தொடர்பாக பணம் கொண்டு வந்ததும் தெரிய வந்தது. இருப்பினும், அவர் எடுத்து வந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லை என்பதால், நிலை கண்காணிப்பாளர்கள் குழுவினர், ரூ.1.80 லட்சத்தை பறிமுதல் செய்து, தேர்தல் கட்டுப்பாட்டு அறை அலுவலர்களிடம் ஒப்படைத்தனர்.

தொடர்ந்து, தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷ் உத்தரவின் பேரில், அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து, உரிய ஆவணங்களை சமர்பித்து, பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு, மதனிடம் தேர்தல் பிரிவு அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

Rs.1.80 Lakhs without proper documents seized in a car near Erode GH

Scanned with OKEN Scanner

37

தினகரன் 11 JAN 2025

## துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு




▶ ஈரோடு மாநகராட்சியில் வேட்பு மனு தாக்கல் நேற்று துவங்கிய நிலையில் மாநகராட்சி வளாகத்தில் பாதுகாப்பிற்காக போலீசார் குவிக்கப்பட்டனர். இதில் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது

Armed Police Security in Erode Corporation Premises.

Scanned with OKEN Scanner

தினகரன் 11 JAN 2025

# 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு



▶ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை யொட்டி 100 சதவித வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி நடந்தது.

ஈரோடு, ஜன.11: ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு வேட்பு மனு தாக்கல் நடைபெற்று வருகிறது. ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் செயல்பட்டு வரும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள், பிரப் சாலையில் 100 விழுக்காடு வாக்களிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மனித சங்கிலி பேரணியாக நின்றனர். 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட இந்த மனித சங்கிலியில் நாட்டின் "எதிர்காலம் நம்ம கையில் தான் இருக்கு, விரல் கரை நல்லது" "பிப்ரவரி 5ம் தேதி 100 சதவீத வாக்களிப்போம், ஏனுங்க வாக்கு போடுங்க" என்ற வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு மனித சங்கிலியில் மாணவ, மாணவிகள் ஈடுபட்டனர்.

ஈரோடு கருங்கல்பாளையம் அரசு நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளியின் முன்பு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. அப்போது பள்ளி ஆசிரியர்கள் கூறுகையில், "18 வயது நிரம்பிய அனைவரும் தவறாமல் வாக்களித்து தங்களது ஜனநாயக கடமையாற்ற வேண்டும். சட்டத்திற்குட்பட்டு சாதி, மத வேறுபாடுகளை களைந்து நேர்மையுடன் வாக்களிக்க வேண்டும்" என்றனர். இதேபோன்று, கருங்கல்பாளையத்தில் சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் பொதுமக்கள் மத்தியில் 100 சதவீத வாக்குப்பதிவு வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

SVEEP Activity to emphasis 100% polling.

Scanned with OKEN Scanner

தினகரன் 11 JAN 2025

# உதவித்தேர்தல் நடத்தும் அலுவலரிடமும் வேட்பு மனுத்தாக்கல் செய்யலாம்

## தேர்தல் நடத்தும் அலுவலர் மனிஷ் தகவல்

ஈரோடு, ஜன.11: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் வேட்பு மனுத்தாக்கலுக்கு இன்னும் 2 நாட்கள் மட்டுமே உள்ளதால் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடமும் (ஏஆர்ஓ) வேட்பு மனுத்தாக்கல் செய்யலாம் என தேர்தல் நடத்தும் அலுவலரும், நகராட்சி ஆணையருமான மனிஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நிருபர்களிடம் அவர் கூறியதாவது: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் தொடங்கிய நாளான நேற்று 3 சுயேட்சை வேட்பாளர்கள் மட்டும் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர். தொடர்ந்து, விடுமுறை தினங்கள் தவிர்த்து வரும் 13, 17ம் தேதிகள் என 2 நாட்களில் மட்டுமே வேட்பு மனுத்தாக்கல் செய்ய முடியும். விதிமுறைகளின்படி, அரசு கட்டிடங்கள், பொது இடங்களில் வைக்கப்பட்டிருந்த விளம்பரங்கள் அகற்றப்பட்டு விட்டன.

தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசி மூலமாக புகார்கள் வந்துள்ளன. இதுவரை, 42 புகார்கள் பெறப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. போதிய ஆவணங்களின்றி எடுத்துவரப்பட்ட பணம் இதுவரை ரூ.2.80 லட்சம் கைப்பற்றப்பட்டு மாவட்ட கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. வேட்பு மனுத்தரக்கல் செய்ய இன்னும் 2 நாள்கள் மட்டுமே இருப்பதால், தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவ்லர் ஆகியோரிடமும் வேட்பாளர்கள் மனுத்தாக்கல் செய்யலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Nomination can be filed with Asst.Returning Officer- Mr.Manish, The Returning Officer informs.

Scanned with OKEN Scanner

43

தினகரன் 11 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# வேட்பு மனுத்தாக்கல் தொடங்கியது

**தேர்தல் மன்னன் உட்பட 3 பேர் மனுதாக்கல்**

ஈரோடு, ஜன.11: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று தொடங்கியது. தேர்தல் மன்னன் உட்பட 3 பேர் மனு தாக்கல் செய்தனர்.



▶ வேட்பு மனு தாக்கல் செய்ய இறுதி சடங்கு செய்யும் நபர் வேடத்தில் வந்த சுயேட்சை வேட்பாளர் நூர் முகமது. அடுத்த படம்: தேர்தல் மன்னன் பத்மராஜன்.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று தொடங்கி வரும் 17ம் தேதி வரை நடைபெறவுள்ளது. விடுமுறை நாட்கள் தவிர மீதமுள்ள 10, 13, 17ம் தேதிகளில் மட்டும் என மொத்தம் 3 நாட்கள் மட்டுமே வேட்பு மனுத்தாக்கல் நடைபெறும். இதையடுத்து, 18ம் தேதி வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்படும். வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதற்கான இறுதி நாள் 20ம் தேதியாகும். தொடர்ந்து, பிப்ரவரி 5ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. 8ம் தேதி சித்தோட்டில் உள்ள அரசினர் பொறியியல் கல்லூரியில் (ஐஆர்டிடி) வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி நேற்று வேட்பு மனுத்தாக்கல் தொடங்கியது. முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வேட்பு மனுத்தாக்கல் நடைபெற்றது. திமுக உள்ளிட்ட பிரதான கட்சிகள் வேட்பாளரை அறிவிக்காத நிலையில், சுயேட்சை வேட்பாளர்கள் மட்டும் நேற்று தங்களது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். வேட்பு மனுத்தாக்கலின் முதல் நாளான நேற்று தேர்தல் மன்னன் பத்மராஜன் (64) சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்து முதல் நபராக நேற்று தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். சேலம் மாவட்டம், மேட்டுரைச் சேர்ந்த இவர் பஞ்சர் கடை வைத்துள்ளார். இதுவரை 246 முறை பல்வேறு தேர்தல்களிலும் போட்டியிட்டு உள்ள இவர் கடந்த 2023 ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலிலும் போட்டியிட்டார். தொடர்ந்து தற்போது நடைபெறும் இடைத்தேர்தலிலும் போட்டியிட நேற்று வேட்பு மனுத்தாக்கல் செய்தார். இது அவர் போட்டியிடும் 247வது தேர்தல் ஆகும்.




2வது நபராக கோவை சுந்தராபுரத்தைச் சேர்ந்த நூர்முகமது (67) வேட்பு மனுத்தாக்கல் செய்தார். இதுவரை 45 தேர்தல்களில் சுயேட்சையாக போட்டியிட்டுள்ள அவருக்கு இது 46வது தேர்தல் ஆகும். கோவையில், பயன்படுத்தப்பட்ட செகண்ட் ஹேண்ட் கார்கள் வாங்கி விற்கும் தொழில் செய்து வரும் இவர், தேர்தலில் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும். ஓட்டுக்கு பணம் வாங்கக்கூடாது என வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலும் இத்தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்திருப்பதாக தெரிவித்தார். ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒவ்வொரு வேடத்தில் வந்து வேட்பு மனுத்தாக்கல் செய்யும் இவர் கடந்த 2023 ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் செருப்பு மாலை அணிந்து வந்து வேட்பு மனுதாக்கல் செய்தார். நேற்று, சடலத்துக்கு இறுதிச்சடங்கு செய்பவரை போல நெருப்புச்சட்டியுடன், சேகண்டி அடித்து வந்து, பால் ஊற்றி இறுதிச்சடங்கு செய்தவாறு வந்து வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

3வது நபராக கரூர் ஆத்தூர் பிரிவை சேர்ந்த மதுரை விநாயகம் (51) என்ற ஓய்வுபெற்ற ராணுவ வீரர் வேட்பு மனுத்தாக்கல் செய்தார். அவர் ராணுவத்தில் ஜூனியர் கமிஷன் ஆபிஸர் பொறுப்பு வகித்து வந்தவராவார். கடந்த 2016ல் ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற இவர், தேர்தல்களில் போட்டியிடுவது இது 3வது முறையாகும். இதற்கு முன்னர் எம்பி தேர்தலில் பொள்ளாச்சியிலும், விக்கிரவாண்டி இடைத்தேர்தலிலும் இவர் போட்டியிட்டு உள்ளார். நாட்டின் எல்லையில் மக்களுக்காக பணியாற்றிய நான் இன்று தொகுதி மக்களுக்கு பணியாற்றுவதற்காக இந்த தேர்தலில் வேட்பு மனுத்தாக்கல் செய்கிறேன் என தெரிவித்தார். முதல் நாளான நேற்று மேற்கண்ட 3 பேர் மட்டுமே வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

Filing nomination started in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினமணி

[illegible] 1 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: முதல்நாளில் 3 பேர் வேட்புமனு தாக்கல்

ஈரோடு, ஜன.10: ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தல் பிப்ரவரி 5- ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் வேட்புமனு தாக்கல் வெள்ளிக்கிழமை தொடங்கியது. முதல் நாளில் சுயேச்சையாக போட்டியிட 3 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி உறுப்பினர் ஈவிகேஎஸ். இளங்கோவன் கடந்த டிசம்பர் 14-ஆம் தேதி உடல்நலக் குறைவால் காலமானார். இதையடுத்து இந்தத் தொகுதிக்கு இடைத்தேர்தல் பிப்ரவரி 5- ஆம் தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. இடைத்தேர்தலில் போட்டியிடுபவர்களின் வேட்புமனுக்கள் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை காலை முதல் 17- ஆம் தேதி வரை பெறப்பட உள்ளது. 18- ஆம் தேதி வேட்புமனுக்கள் பரிசிலனை செய்யப்படும். தொடர்ந்து வேட்புமனுக்களை திரும்பப் பெற்றுக்கொள்ள 20 -ஆம் தேதி இறுதி நாளாகும். பொங்கல் பண்டிகை அரசு விடுமுறை நீங்கலாக வெள்ளிக்கிழமை மற்றும் வரும் 13, 17 ஆகிய 3 நாள்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய முடியும்.

**3 ஆவது முறையாக வாக்களிக்கும் மக்கள்:** ஈரோடு கிழக்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரை தேர்வு செய்ய 3- ஆவது முறையாக மக்கள் தேர்தலில் வாக்களிக்க உள்ளனர். ஏற்கெனவே கடந்த 2021 தேர்தலில் வென்ற திருமகன் ஈவெரா மறைவுக்கு பிறகு 2023- ஆம் ஆண்டு நடந்த இடைத்தேர்தலிலும் வாக்களித்திருந்தனர். தற்போது பிப்ரவரி 5- ஆம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலிலும் வாக்களிக்க உள்ளனர்.



ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும் மாநகராட்சி ஆணையருமான என்.மணீஷிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்த பத்மராஜன்.

2021 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் ஈரோடு கிழக்குதொகுதிகாங்கிரஸ்கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. அப்போது களம் கண்ட ஈவிகேஎஸ்.இளங்கோவன் மகன் திருமகன் ஈவெரா 67 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அதிமுக கூட்டணியில் தமாகா சார்பில் போட்டியிட்ட யுவராஜா 58 ஆயிரம் வாக்குகள் பெற்று இரண்டாமிடம் பிடித்தார்.

திருமகன் ஈவெரா மறைந்த நிலையில் 2023- இல் நடைபெற்ற இடைத்தேர்தலில், அவரது தந்தை ஈவிகேஎஸ்.இளங்கோவன் காங்கிரஸ் சார்பில் களம் இறங்கினார். அதிமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏ கே.எஸ்.தென்னரசு போட்டியிட்ட நிலையில், ஈவிகேஎஸ்.இளங்கோவன் ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 156 வாக்குகள் பெற்று 66,233 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இரண்டாம் இடம் பிடித்த கே.எஸ்.தென்னரசு 43,923 வாக்குகள் பெற்றார்.

**3 சுயேச்சை வேட்பாளர்கள் மனு தாக்கல்:** இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வெள்ளிக்கிழமை தொடங்கிய நிலையில் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் மாநகராட்சி ஆணையரும், ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருமான என். மணீஷ், வேட்புமனுக்களை பெற்றுக்கொண்டார். முதல் நாளில் 3 பேர் சுயேச்சையாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தேர்தல்மன்னன் என அழைக்கப்படும் பத்மராஜன் (64) சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்து தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். சேலம் மாவட்டம், மேட்டூரைச் சேர்ந்த இவர் பஞ்சர் கடை வைத்துள்ளார். இது வரை 246 முறை பல்வேறு தேர்தல்களிலும் போட்டியிட்டு உள்ள இவர், கடந்த 2023 ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலிலும் போட்டியிட்டார். தொடர்ந்து தற்போது நடைபெறும் இடைத் தேர்தலிலும் போட்டியிட இன்று வேட்புமனு தாக்கல் செய்தார். இது அவருக்கு 247 ஆவது தேர்தல் ஆகும்.

தேர்தல் செலவுகளுக்காக இது வரை சுமார் ஒரு கோடி ரூபாய் செலவு செய்துள்ளதாக கூறிய அவர், அதற்கான தொகையை தனது தொழில் மூலமாகவே சம்பாதித்து செலவு செய்து வந்ததாக தெரிவித்தார். மேலும் கின்னஸ் சாதனையில் இடம் பிடிக்கவே தொடர்ந்து தேர்தலில் போட்டியிட்டு வருவதாகவும் அவர் கூறினார். இவர் 2 முறை குடியரசு தலைவர் தேர்தலுக்கும் போட்டியிட்டு உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல கோவை, சுந்தராபுரத்தைச் சேர்ந்த நூர்முகமது(67) சுயேச்சை வேட்பாளராக வேட்பு மனு தாக்கல் செய்தார். இதுவரை 45 தேர்தல்களில் வேட்புமனு தாக்கல்செய்து சுயேட்சையாகபோட்டியிட்டுள்ள அவர் 46 வது முறையாக இந்த தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார். 2023 நடைபெற்ற இடைத்தேர்தலிலும் இவர் போட்டியிட்டார்.

கோவையில் கார்கள் வாங்கி விற்கும் தொழில் செய்து வரும் இவர், தேர்தலில் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் தேர்தல்களில் போட்டியிட்டு வருவதாக கூறினார்.

இதேபோல கரூர் ஆத்தூர் பிரிவை சேர்ந்த ஓய்வுபெற்ற ராணுவ வீரர் மதுரை விநாயகம் (51) சுயேச்சையாக வேட்புமனு தாக்கல் செய்தார். கடந்த 2016-இல் ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். இவர் தேர்தல்களில் போட்டியிடுவது இது மூன்றாவது முறையாகும். இதற்கு முன்னர் மக்களவைத் தேர்தல் மற்றும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிட்டு உள்ளார். நாட்டின் எல்லையில் மக்களுக்காக பாதுகாப்பில் பணியாற்றிய நான் இன்று தொகுதி மக்களுக்கு பணியாற்றுவதற்காக இந்த தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்கிறேன் என்றார்.

Erode East Assembly Constituency By-election
3 persons filed nomination on the first day.

Scanned with OKEN Scanner

47

தினபூமி

11 JAN 2025

### இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள

# ஈரோடு கிழக்கு தொகுதியில் மனுத்தாக்கல் தொடங்கியது

## சுயேட்சை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்

ஈரோடு, ஜன. 11-

இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கிட.து.முதல் நாளில் சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மரணம் அடைந்ததை தொடர்ந்து இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ம் தேதி நடக்கிறது. இதையடுத்து ஈரோடு மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று காலை 11 மணிக்கு தொடங்கியது. சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள் வந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

அதிக தேர்தல்களில் போட்டியிட்டு சாதனை படைத்த மேட்டூரை சேர்ந்த பத்மராஜன் இந்த இடைத் தேர்தலிலும் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார். வேட்புமனு தாக்கல் செய்ய வருகிற 17-ம் தேதி கடைசி நாள் ஆகும்.

நேற்று பிற்பகல் 3 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்பட்டன.

தொடர்ந்து வருகிற 13-ம் தேதி மற்றும் 17-ம் தேதி ஆகிய நாட்கள் மட்டுமே வேட்புமனுக்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்ய முடியும். மற்ற நாட்கள் அரசு விடுமுறை நாட்கள் ஆகும்.

18-ம் தேதி மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். வேட்புமனுவை திரும்ப பெற 20-ந் தேதி கடைசி நாளாகும்.

Filing nomination started in Erode East Assembly Constituency.
Independent Candidates filed nomination.

Scanned with OKEN Scanner

11 JAN 20..

தினபூமி

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: 247-வது முறையாக வேட்பு மனு தாக்கல் செய்த தேர்தல் மன்னன் பத்மராஜன்

ஈரோடு, ஜன. 11-

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5-ம் தேதி நடைபெற் உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கி வரும் 17-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. தொடர்ந்து, விடுமுறை நாட்கள் தவிர மீதமுள்ள 13, 17 -ம் தேதிகளில் என மொத்தம் 3 நாட்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் நடைபெறும்.

இதையடுத்து, 18-ந் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது.

இதைத்தொடர்ந்து 20-ந் தேதி வேட்பு மனுக்கள் வாபஸ் பெற கடைசி நாளாகும். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். தொடர்ந்து, பிப்ரவரி 5-ந் தேதி வாக்குப் பதிவு நடைபெறுகிறது. 8 ந் தேதி, சித்தோட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. இந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் அறிவிப் பின்படி இன்று வேட்புமனுத் தாக்கல் தொடங்கியது, தி.மு.க. உள்ளிட்ட பிரதான கட்சிகள் வேட்பாளரை அறிவிக்காத நிலையில், சுயேட்சை வேட்பாளர்கள் சிலர் மட்டும் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்ய வந்தனர்!

முதல் நபராக தேர்தல் மன்னன் சேலம் மாவட்டம் மேட்டூரை சேர்ந்த பத்மராஜன் (64) என்பவர் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்தார்.

இதுகுறித்து பத்மராஜன் கூறியதாவது:-

நான் இதுவரை 246 தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். தற்போது ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடுவதற்காக இன்று வேட்பு மனு தாக்கல் செய்துள்ளேன். இது 247 ஆவது தேர்தலாகும். நான் இது வரை 6 ஜனாதிபதி தேர்தல், 6 துணை ஜனாதிபதி தேர்தல், 33 பாராளுமன்றத் தேர்தல், 76 எம்.எல்.ஏ.க்கள் தேர்தல், மாநகராட்சி மேயர் தேர்தல், கவுன்சிலர் தேர்தல் என போட்டிட்டு உள்ளேன். வாஜ்பாய், நரசிம்மராவ், கருணாநிதி, ஜெயலலிதா, சினிமா நடிகர் சரத்குமார் என பலரை எதிர்த்து போட்டியிட்டு உள்ளேன்.

கடைசியாக கேரளா மாநிலம் வயநாட்டில் நடந்த எம்.பி. தேர்தலில் பிரியங்கா காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டு 286 வாக்குகள் பெற்றேன். தமிழகத்தில் கடைசியாக விக்கிரவாண்டியில் நடந்த இடைத் தேர்தலில் போட்டியிட்டு 16 வாக்குகள் பெற்றேன். கடந்த முறை ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிட்டு 8 வாக்குகள் பெற்றேன்.

தேர்தலில் அதிக முறை போட்டிட்டதற்காக கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளேன். இன்னும் இந்தியாவில் எத்தனை தேர்தல் வந்தாலும் நான் உயிரோடு இருக்கும் வரை அனைத்து தேர்தலிலும் போட்டியிடுவேன். தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்து அதற்காக பிரசாரம் எல்லாம் செய்ய மாட்டேன். எனது நோக்கம் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பது மட்டும்தான். இவ்வாறு அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து இன்னும் சில சுயேச்சை வேட்பாளர்கள் இன்று மதியம் வரை தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தனர். வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த வேட்பாளர்களிடமிருந்து, தேர்தல் அலுவலர்கள் வேட்பாளர் படிவம். இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் டெபாசிட்தொகை ஆகியவற்றை சரிபார்த்தனர். அதன்பின்னர், ஈரோடு கிழக்குத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷ், வேட்பாளர்களிடமிருந்து வேட்புமனுக்களை பெற்றுக்கொண்டார். இந்த நடைமுறைகள்முழுவதும் மாநகராட்சி அலுவலக வளாகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள சி.சி. டி.வி. கேமராக்கள் மூலமாக கண்காணிக்கப்பட்டது. மேலும், வேட்புமனுத் தாக்கலை முன்னிட்டு, மாநகராட்சி அலுவலக நுழைவு வாசல் மற்றும் வளாகம் முழுவதும். ஈரோடு டவுன் டி.எஸ்.பி. முத்துக்குமரன், இன்ஸ்பெக்டர் அனுராதா ஆகியோர் தலைமையில் 60க்-கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

Erode East Assembly Constituency By-election
"Therthal Mannan Padmarajan" filed his nomination for the 247th time.

Scanned with OKEN Scanner

தினபூமி

11 JAN 2025

# ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பதிவாகும் வாக்கு எண்ணும் மையமான சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரி

## மாவட்ட தேர்தல் அலுவலர் ராஜ கோபால் சுன்கரா ஆய்வு



ஈரோடு.ஜன.11-

ஈரோடு சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் (ஐசுவுவு)இ நடைபெறவுள்ள 98 - ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் 2025-ல் பதிவாகும் வாக்குகள் எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 98 - ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகின்ற 05.02.2025 (புதன்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. மேலும், பதிவான வாக்குகள் எண்ணிக்கை வருகின்ற 08.02.2025 அன்று நடைபெறவுள்ளது.

அதன்படி, ஈரோடு, சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் வாக்கு எண்ணும் மையத்தில்; மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு பணிகளை காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் உள்ளாட்சித்துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் பார்வையிட்டார்.

மேலும், வாக்குப்பதிவு முடிவுற்று வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் பாதுகாத்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை நாளன்று மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் அலுவலர்களுக்கு அறிவுரை [illegible]னார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா வகர் இகாப., தேர்தல் நடத்தும் அலுவலர் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மரு.மனிஷ் தேர்தல் வட்டாட்சியர் சிவசங்கர் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

Erode District Collector / The Election Officer inspected the counting centre at IRTT, Chithode.

Scanned with OKEN Scanner

வணக்கம் இந்தியா

11 JAN 2025

# வாக்குகள் எண்ணும் மையமான ஈரோடு சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியினை ஆட்சியர் ஆய்வு



ஈரோடு, ஜன.11

ஈரோடு சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் (IRTT), நடைபெறவுள்ள 98 ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025ல் பதிவாகும் வாக்குகள் எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, 98 ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகின்ற 05.02.2025 (புதன்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. மேலும், பதிவான வாக்குகள் எண்ணிக்கை வருகின்ற 08.02.2025 அன்று நடைபெற வுள்ளது.

அதன்படி, ஈரோடு, சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு பணிகளை காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் உள்ளாட்சித்துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டார். மேலும், வாக்குப்பதிவு முடிவுற்று வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் பாதுகாத்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை நாளன்று மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கு.ஜவகர், தேர்தல் நடத்தும் அலுவலர் / ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மரு.மனிஷ், தேர்தல் வட்டாட்சியர் சிவசங்கர் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

Erode District Collector / The Election Officer inspected the counting centre at IRTT, Chithode.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 11 JAN 2025

# 'ஏ.ஆர்.ஓ.,விடமும் மனுத்தாக்கல் செய்யலாம்'

**ஈரோடு, ஜன. 11–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் இன்னும், 2 நாட்களே வேட்பு மனுத்தாக்கலுக்கு வாய்ப் புள்ளதால், உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடமும் (ஏ.ஆர்.ஓ.,) மனு தாக்கல் செய்யலாம், என தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் மணீஷ் தெரிவித்தார்.

அவர், நிருபர்களிடம் கூறியதாவது: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வேட்பு மனுத் தாக்கல் துவங்கி, 3 சுயேட்சை வேட்பாளர்கள் மனுத்தாக்கல் செய் துள்ளனர். அடுத்து, 13, 17 ஆகிய தேதிகளில் மதியம், 3:00 மணி வரை தாக்கல் செய்யலாம்.

இதுவரை, அரசு கட்டடங்கள், பொது இடங்கள், தனியார் இடங் களில் உள்ள விளம்பரங்கள், அகற்ற வேண்டியவற்றை அகற்றி விட்டோம். கட்டுப்பாட்டு அறை எண்ணுக்கு இதுவரை, 42 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுத் துள்ளோம். நேற்று முன்தினம், 1 லட்சம் ரூபாய், நேற்று, 1.80 லட்சம் ரூபாய் என, 2.80 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அவற்றை, மாவட்ட கருவூலத்தில் செலுத்தி உள்ளோம். இன்னும், 2 நாட்களே வேட்பு மனுத்தாக்கலுக்கு உள்ளதால், முன்னேற்பாடு செய் துள்ளோம். மனுவை பரிசீலித்தே, தாக்கல் செய்ய அனுமதிக்கிறோம். தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் என யாரிடம் வேண்டுமானாலும் தாக்கல் செய்யலாம். பிரச்னை வராது. இவ் வாறு கூறினார்.

Nomination can be filed with ARO

Scanned with OKEN Scanner

57

காலைக்கதிர்                11 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# முதல் நாளில் மூன்று பேர் மனு தாக்கல்


ஈரோடு, ஜன. 11-

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தலில், வேட்பு மனுத்தாக்கல் நேற்று துவங்கியது.

மனுத்தாக்கல் நடக்கும் மாநகராட்சி அலுவலகத்தில், டவுன் டி.எஸ்.பி., முத்து குமரன் தலைமையிலான போலீசார் குவிக்கப்பட்டனர். மாநகராட்சி தலைமை அலுவலக கட்டடத்தில், மாநகராட்சி ஆணையர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷ் அறையில், வேட்பு மனு பெறப் பட்டன.

முதல் வேட்பாளராக, சேலம் மாவட்டம் மேட்டூரை சேர்ந்த 'தேர்தல் மன்னன்' கே.பத்மராஜன், மனுத்தாக்கல் செய்தார்.

அவர் கூறியதாவது: முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் முதல்வர்கள் கருணாநிதி, ஜெயலலிதா, இ.பி.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், மனுத்தாக்கல் செய்த, 'தேர்தல் மன்னன்' பத்மராஜன். அடுத்தபடம்: கையில் தீச்சட்டி ஏந்தி, சங்கு ஊதியும் மனுத்தாக்கல் செய்ய வந்த நூர் முகம்மது.

எஸ்., தற்போதைய முதல்வர் ஸ்டாலின் உட்பட பலருக்கு போட்டியாகவும், ஜனாதிபதி தேர்தலிலும் மனுத்தாக்கல் செய்துள்ளேன். ஈரோடு கிழக்கில், 247வது மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

கடந்த, 1988 முதல் தற்போது வரை, வேட்பு மனுத்தாக்கல் கட்டணம், பயணச் செலவு என்ற வகையில், ஒரு கோடி ரூபாய் வரை செலவிட்டுள்ளேன். ஒரு முறை கூட டிபாசிட் பெற்றதில்லை. உள்ளாட்சி தேர்தலில் ஒரு முறை ஒரு ஓட்டு கூட பெறவில்லை. கின்னஸ் சாதனைக்காக தொடர்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

ராணுவத்தில் பணி செய்து ஓய்வு பெற்ற, கரூர், ஆத்தூர் பிரிவை சேர்ந்த மதுரை விநாயகம், 51; கோவை, சுந்தராபுரத்தை சேர்ந்த நூர்முகம்மது, 67, ஆகியோர் மனுத்தாக்கல் செய்தனர். இதில் நூர் முகமது, இடுகாட்டுக்கு செல்பவர்கள் போல, கையில் தீச்சட்டி, பால், சங்கு ஊதி, சேகண்டி அடித்தபடி வந்தார்.

அவர் கூறுகையில், "ஓட்டுக்கு பணம் பெற கூடாது; 100 சதவீதம் ஓட்டுப்பதிவு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இவ்வாறு வந்தேன்," என்றார்.

முதல் நாளில் மூன்று பேர் மனுத்தாக்கல் செய்தனர். 23 வேட்பு மனு பெற்று சென்றனர். அடுத்து, வரும் 13 மற்றும் 17ல் மனுத்தாக்கல் நடக்க உள்ளதாக, தேர்தல் அலுவலர்கள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election
3 persons filed nomination on the first day.


Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 11 JAN 20

# வேட்பு மனுத்தாக்கல் செய்யும் வளாகத்தில் மயங்கி விழுந்த ஒப்பந்த பணியாளர் சாவு

**ஈரோடு, ஜன. 11–**

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு மனுத்தாக்கல் தொடங்கிய நிலையில், தேர்தல் பணிக்காக வந்த ஒப்பந்த பணியாளர், அலுவலக வளாகத்தில் மயங்கி விழுந்தார்.



■ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், மனுத்தாக்கல் நடக்கும் மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் பணிக்கு வந்த, ஒப்பந்த பணியாளர் சந்திரமோகன் மயங்கி விழுந்தார். அவரை கைத்தாங்கலாக சிகிச்சைக்கு அழைத்து செல்ல உதவிய மற்ற அலுவலர்கள். மருத்துவமனையில் அவர் இறந்தார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் இறந்தார்.

ஈரோடு, கள்ளுக்கடை மேட்டை சேர்ந்தவர் சந்திரமோகன், 71; ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் உள்ள நெடுஞ்சாலை துறையில் பணி செய்து ஓய்வு பெற்றவர். தற்போது கலெக்டர் அலுவலகத்தில் சிறப்பு டி..ஆர்.ஓ., (நிலம் எடுப்பு பிரிவு) அலுவலகத்தில் ஒப்பந்த பணியாளராக பணி செய்தார். கிழக்கு தொகுதிக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று காலை, மாநகராட்சி அலுவலகத்தில் துவங்கியது. இத்தேர்தல் பணியில் நிலம் எடுப்பு பிரிவு அலுவலர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுடன் காலை, 8:45 மணிக்கு மாநகராட்சி அலுவலகம் வந்த சந்திரமோகன் திடீரென மயங்கி கீழே விழுந்தார்.

அங்கிருந்தவர்கள் அவரை தூக்கி, 108 ஆம்புலன்ஸ் பைக் வாகன மருத்துவ உதவியாளர் மூலம் முதலுதவி செய்து, வருவாய் துறை ஜீப்பில் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் மதியம், 12:00 மணியளவில் இறந்தார். இதுகுறித்து ஈரோடு டவுன் போலீசார் விசாரிக்கின்றனர்.

In the nomination filing premises a contract employee dies

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 11 JAN 2025

# லேத் பட்டறைக்காரரிடம் ரூ.1.80 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன. 11–

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான நிலை கண்காணிப்பு குழு அதிகாரிகள், ஈரோடு, அரசு மருத்துவமனை ரவுண்டானா அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். ஈரோடு, பெருந்துறை சாலை பகுதியை சேர்ந்த சண்முகம் காரில் வந்தார். லேத் பட்டறை நடத்தி வருகிறார். காரை நிறுத்தி சோதனையிட்டபோது, 1.80 லட்சம் ரூபாய் இருந்தது. பணத்துக்கான ஆவணங்கள் ஏதுமில்லை. இதனால் பணத்தை பறிமுதல் செய்த குழுவினர், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்ப்பித்து கருவூலத்தில் செலுத்தினர்.

அதிகாரிகளிடம் சண்முகம் கூறுகையில், "ஒரு இடம் வாங்குவதற்கு முன்பணம் வழங்குவதற்காக, 1.80 லட்சம் ரூபாயை எடுத்து சென்றதாகவும், உரிய ஆவணங்களை சமர்பித்து பெற்றுக் கொள்கிறேன்," என்று தெரிவித்து சென்றார்.

---

Rs.1.80 Lakhs seized from a lathe owner.

Scanned with OKEN Scanner